# பிரதமர் மோடி தமிழ்நாட்டிற்குச் செய்த திட்டங்களைச் சொல்ல முடியுமா?

## திருச்சியில் தலைவர் - முதல்வர் உரை... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி!

தங்களின் வீட்டிற்குத் தேவையான வாஷிங் மெஷின், ஃபிரிட்ஜ், டி.வி., கிரைண்டர், மிக்சி, மைக்ரோ-வேவ் அவன், இண்டக்ஷன் அடுப்பு போன்ற வீட்டு உபயோகப் பொருட்களைப் புதிதாக வாங்கவும் அல்லது ஏற்கெனவே பயன்படுத்தி வரும் இத்தகைய பொருட்களை கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக வேறு வாங்கிக் கொள்ளவும் ‘இல்லத்தரசி’ என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும். அதுவும் நீங்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள உங்களுக்குப் பிடித்த கடைகளிலேயே உங்களுக்குப் பிடித்த கம்பெனி, உங்களுக்கு பிடித்த மாடலாகப் பார்த்து, இந்தப் பொருட்களை நீங்கள் வாங்கிக் கொள்ளலாம்.

இதற்காக ஒவ்வொரு குடும்பத்திற்கும் எவ்வளவு ரூபாய் கூப்பன்? தலா 8 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான கூப்பன் கொடுக்கப் போகிறோம் என்று அறிவித்திருக்கிறோம். இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் இதைப் பற்றித்தான் ஒரே பேச்சாக இருக்கிறது. நம்முடைய பெண்கள் ஒரு சேலை வாங்கினால் கூட, அவர்களுக்குப் பிடித்த கடையில், அவர்களுக்குப் பிடித்த டிசைனில், அவர்களுக்குப் பிடித்த கலரில் வாங்க வேண்டும் என்று நினைப்பார்கள். அதை மனதில் வைத்துதான் இந்த திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம். இல்லத்தரசி திட்டத்தில் என்ன வாங்க வேண்டும், எப்படி வாங்க வேண்டும் எல்லாமே ‘உங்கள் சாய்ஸ்’ தான்!

அதேபோன்று, உலகிற்கே உணவு அளிக்கும் உழவர்களை மகிழ்விக்க ஒரு மாபெரும் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறோம். இலவச மின்சாரம் பெறும் 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு, எந்த வித மீட்டரும் பொருத்தப்படாத நவீன மின்சாரப் பம்பு செட்டுகள் வழங்கப்படும். அனைவரும் பழைய பம்பு செட்டு வைத்திருப்பார்கள். சிலது அடிக்கடி ரிப்பேர் ஆகும். அதிக கரண்ட் செலவாகும். அதிக விலை கொடுத்து வாங்க முடியாத நிலையில் இருப்பீர்கள். அதை நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் அரசே இனி வாங்கித் தரும்.

**நெல், கரும்பு, பால் கொள்முதல் விலை அதிகரிக்கப்படும்!**

நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

கரும்பு கொள்முதல் விலை டன் ஒன்றுக்கு 4 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு 5 ரூபாய் உயர்த்தி வழங்கப்படும்.

முதியோர் உதவித்தொகை இனி மாதம் 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை 2 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

இன்னும் இருக்கிறது,

மீன்பிடித் தடைக்காலச் சிறப்பு நிவாரணத் தொகை 8 ஆயிரம் ரூபாயில் இருந்து 12 ஆயிரம் ரூபாயாக, மீன்பிடி குறைவுக்கால சிறப்பு நிவாரணத் தொகை 6 ஆயிரம் ரூபாயில் இருந்து 9 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

மகளிர் சுய உதவிக்குழு சகோதரிகள் நிறைய பேர் இங்கு வந்திருப்பீர்கள். உங்களை எல்லாம் பிசினஸ்-வுமனாக முன்னேற்றும் வகையில் பிணை எதுவும் இல்லாமலேயே, 5 இலட்சம் ரூபாய் வரை மானியத்துடன் வங்கிக் கடனுதவி வழங்கப்படும்.

பேரிடர் கால இழப்பீடுகளாக இறவைப் பாசன பயிர்கள் மற்றும் நெல் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபாயும், நீண்டகாலப் பயிர்களுக்கு 27 ஆயிரம் ரூபாயும், மானாவாரிப் பயிர்களுக்கு 12 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும்.

உயர்கல்வி படிக்கும் 35 இலட்சம் மாணவர்களுக்கும் அடுத்த 5 ஆண்டுகளுக்குள் லேப்டாப் வழங்கப்படும்.

அடுத்த 5 ஆண்டுகளில் 10 ஆயிரம் புதிய பேருந்துகள் இயக்கப்படும்.

அனைத்துச் சட்டமன்றத் தொகுதிகளிலும் முதல்வர் படைப்பகங்கள் அமைக்கப்படும்.

தமிழ்நாட்டின் இதயமாக இருக்கும் இந்த டெல்டா மாவட்டங்களுக்கான சிறப்பு வளர்ச்சித் திட்டம்

- இப்படி ஏராளமான வாக்குறுதிகளை நாம் கொடுத்திருக்கிறோம்.

நாங்கள் சொன்னால் செய்வோம். செய்வதைத் தான் சொல்வோம். நான் கலைஞரின் மகன். சொன்ன வாக்குறுதிகளை மறக்கவும் மாட்டேன், மறுக்கவும் மாட்டேன். கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் நிதி நிலையைச் சீராக்கி, ஒவ்வொன்றாக நாங்கள் நிறைவேற்றி வரும் திட்டங்களே அதற்கு சாட்சி!

தன்னுடைய பத்தாண்டு கால ஆட்சியில் தமிழ்நாட்டை அனைத்துத் துறையிலும் படுகுழிக்குத் தள்ளிய அ.தி.மு.க.வும், இந்தியாவை வரலாறு காணாத சரிவுக்குக் கொண்டு சென்றிருக்கும் பா.ஜ.க.வும் சேர்ந்து அமைத்திருக்கும் கூட்டணிக்கு இந்தத் தேர்தலிலும் வழக்கம்போல் படுதோல்வியைதான் நீங்கள் பரிசாக தர வேண்டும்!

மக்களுக்கு நேரடியாக எட்டாயிரம் ரூபாய்க்கான கூப்பனைத் தரப்போகும் நம்முடைய இல்லத்தரசிகள் திட்டத்தைப் பார்த்து இன்றைக்கு வயிறு எரிந்து, அது ஊழலுக்கான திட்டம் என்று சொல்கிறார், பழனிசாமி. எந்த பழனிசாமி, சம்பந்திக்கு காண்ட்ராக்ட் கொடுப்பதற்காகவே ஆட்சியை நடத்திய பழனிசாமி!

தி.மு.க. செய்யும் ஒவ்வொரு திட்டமும் தரமானதாக இருக்கும்! எடுத்துக்காட்டுக்குச் சொல்கிறேன்... தலைவர் கலைஞர் அவர்கள் 2006 தேர்தலின் போது, கலர் டி.வி. வழங்குவோம் என்று சொன்னார். ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனே, கலர் டி.வி.யின் கொள்முதல் நேர்மையாகவும், தரமானதாகவும், யாரும் குறைசொல்ல முடியாததாகவும் இருக்க வேண்டும் என்று, அதற்கான டெண்டரை முடிவு செய்ய, எதிர்க்கட்சியாக இருக்கும் அ.தி.மு.க.வையும் சேர்த்து அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் அடங்கிய குழுவை அமைத்தார்.

**20 ஆண்டுகளாக இருந்துவரும் கலர் டி.வி.க்கள்!**

2006-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதமே கலர் டி.வி.க்களை வழங்கும் விழாவைத் தொடங்கி, ஒன்றரைக் கோடிக்கும் அதிகமான, நம்முடைய தமிழர்களின் வீடுகளுக்கு கலர் டி.வி.க்களை வழங்கினோம். கிட்டத்தட்ட இருபது வருடம் ஆகிறது. இன்றைக்கும் பல வீடுகளில் கலர் டி.வி.யாக மட்டுமல்ல; கலைஞர் டி.வி.யாக அது நிலைத்து நிற்கிறது! இதற்கு பெயர்தான் குவாலிட்டி!

இதுவே, அ.தி.மு.க. ஆட்சியில் மிக்சி, கிரைண்டர், மின்விசிறி என்று கொடுத்தீர்கள். என்ன ஆனது? காயலாங்கடையில் இருக்கிறது. இந்த லட்சணத்தில் வாய் இருக்கிறது என்று என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்று பேசிக் கொண்டிருக்கிறார், நம்முடைய பழனிசாமி அவர்கள்!

ஏற்கெனவே, 2021 தேர்தலில், மகளிர் உரிமைத்தொகையாக நாங்கள் ஆயிரம் ரூபாய் வழங்குவோம் என்று சொன்னவுடனே, அவசர அவசரமாக அவர் வீட்டில் இருக்கும் ஜெராக்ஸ் மெஷினை ஆன் செய்து, 1,500 ரூபாய் தருவோம் என்று அறிக்கை வெளியிட்டார். பழனிசாமியின் வாய்ச்சவடாலும், அவரின் அலங்கோல ஆட்சி நிர்வாகத்தின் ஊழல் பவுசும் தெரிந்து, மக்களான நீங்கள் அவரைப் புறக்கணித்தீர்கள். இப்போதும் மக்களுக்கு நல்லது நடக்கக் கூடாது என்று, வயிற்றெரிச்சலில், தன்னை போலவே பிறரையும் நினைத்து ஊழல் நடக்கும் என்று பேசிக் கொண்டிருக்கிறார்.

அண்மையில், மதுரையில் ஒரு சம்பவம் நடந்தது. இவர்கள் ஆட்சிக்கு வந்தால் என்ன நடக்கும் என்பதற்கு டிரெய்லர்தான் அது. மதுரையில் நடைபெற்ற கூட்டத்தின் நுழைவு வாயிலில் தந்தை பெரியார் படத்தை வைக்கக் கூடாது என்று பா.ஜ.க. சொன்னதும், சுயமரியாதையே இல்லாமல் அதை எடுக்கத் துணிந்தவர்தான் பழனிசாமி. மதுரை பா.ஜ.க. ஆதரவுக் கூட்டத்தில், தந்தை பெரியாரையும், அண்ணாவையும் கொச்சைப்படுத்தும் காணொளியை வெளியிட்டார்கள். அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் மூன்று பேர் கொஞ்சம் கூட சொரணையே இல்லாமல் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

**அ.தி.மு.க. கட்சியைக்கூட அடிமைக் கூட்டமாக்கி விட்டனர்!**

நான் கேட்கிறேன்... மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் இருந்தால் விட்டிருப்பாரா? அல்லது அம்மையார் ஜெயலலிதா அவர்கள் இருந்தால் விட்டிருப்பாரா? பேரறிஞர் அண்ணாவை இவ்வாறு அசிங்கப்படுத்தினால் பார்த்துக்கொண்டு சும்மா இருந்திருப்பார்களா? பழனிசாமியின் ஒரே சாதனை அ.தி.மு.க. எனும் கட்சியை அடிமைக் கூட்டமாக்க சீரழித்து இருப்பதுதான். ‘திராவிடம்’ என்ற சொல்லும் அந்தக் கூட்டத்தில் அவமானப்படுத்தப்பட்டது. அ.தி.மு.க. முன்னணியினர் அதையும் கூட தடுக்கவில்லை. “திராவிடம் என்றால் என்னவென்றே எனக்குத் தெரியாது, நான் புராணங்களை எல்லாம் படித்தது இல்லை” என்று கொஞ்சம் கூட வெட்கமில்லாமல் சிரித்துக்கொண்டே சொன்னவர்தான் பழனிசாமி.

இந்தத் துப்புகெட்ட பழனிசாமி, யார் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை - தன்னுடைய பதவியை காப்பாற்றிக் கொண்டால் போதும் என்று பா.ஜ.க.வின் பாதம் தாங்கியாக இருந்து கொண்டிருப்பவர்தான் பழனிசாமி.

சிறுபான்மைச் சமூகத்திற்கும், இலங்கைத் தமிழர்க்கும் துரோகம் இழைக்கும் வகையில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை மாநிலங்களவையில் ஆதரித்து அது நிறைவேற துணைபோன கட்சிதான் அ.தி.மு.க. ஏன், இவர்களுடன் சேர்ந்து ‘பாட்டாளி’ அன்புமணி ராமதாசும் ஆதரவாக வாக்களித்து துரோகம் செய்தார். இவர்களால்தான் சிறுபான்மையினருக்கு எதிரான அந்தச் சட்டமே மாநிலங்களவையில் நிறைவேறியது. அதைத் தொடர்ந்து நடந்த போராட்டங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் மேல் தாக்குதல் நடத்தப்பட்டது. சுமார் 70 பேர் கொல்லப்பட்டார்கள். இவர்களின் இரத்தக் கறை இன்றைக்கு அ.தி.மு.க. கையில்தான் இருக்கிறது.

**சி.ஏ.ஏ. சட்டத்தை எதிர்க்கிறீர்களா - ஆதரிக்கிறீர்களா?**

இவ்வளவுக்கு பிறகும் பழனிசாமி என்ன பேசினார்? “குடியுரிமைச் சட்டத்தால் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லையே! எந்த முஸ்லீம் பாதிக்கப்பட்டார் என்று காட்டுங்கள்” என்று சொன்னவர்தான் பழனிசாமி. ஆனால், சிறுபான்மை யினர் வாக்குகள் வேண்டும் என்று, 2024 தேர்தலில் தனியாக நின்று நாடகம் ஆடியபோது, CAA சட்டத்தை கண்டிப்பதாக பல்டி அடித்தார் பழனிசாமி. “பா.ஜ.க. மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்துகிறார்கள், CAA சட்டம் ஒரு வரலாற்றுப் பிழை” என்று பிளேட்டை அப்படியே திருப்பிப் போட்டார் பழனிசாமி. நான் இப்போது கேட்கிறேன், எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்களே, நீங்கள் இப்போது அந்தச் சட்டத்தை ஆதரிக்கிறீர்களா? எதிர்க்கிறீர்களா? தைரியம் இருந்தால், வெளிப்படையாகச் சொல்லுங்கள்.

பழனிசாமியின் துரோகப் பட்டியல் இதோடு நிற்கவில்லை. மூன்று வேளாண் சட்டங்களை பா.ஜ.க. கொண்டு வந்தபோது கண்ணை மூடிக் கொண்டு அதையும் ஆதரித்தார் இந்தப் பழனிசாமி. மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராகப் போராடிய எட்டு மாநில விவசாயிகளை, “புரோக்கர்கள்” என்று வசைபாடிக் கொச்சைப்படுத்தினார். இப்படி, பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்து, முழு சந்திர முகியாகவே மாறியிருக்கிறார் பழனிசாமி. அதாவது, முழு சங்கியாகவே மாறிவிட்டார்.

> **தமிழ்நாட்டின் முன்னேற்றமும் வளர்ச்சியும் தொடர வேண்டும் என்றால், ஏழாவது முறையும் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைய வேண்டும், திராவிட மாடல் தொடர வேண்டும். பா.ஜ.க.வும் அதன் கொத்தடிமைக் கூட்டமும் ஆட்சிக்கு வந்தால் அதன் தீமைகள் நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு இருக்கும்! தமிழ்நாடு தமிழ்நாடாகதான் இருக்க வேண்டும்!**

ஊர் ஊராகச் சென்று, அதிமுக கூட்டணியில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று பழனிசாமி சொல்லிக் கொண்டிருக்கிறார். பிரச்சினை இல்லை என்றால், எதற்காக அத்தனை முறை டெல்லிக்குச் சென்றீர்கள். டெல்லிக்குச் சென்று அமித்ஷாவின் அப்பாய்ன்ட்-மெண்டுக்காக பலமணி நேரம் ஏன் காத்துக்கிடந்தீர்கள்? அதுவும் வேறு வேறு காரில் மாறி மாறி சென்று, முகத்தை எல்லாம் மூடிக்கொண்டு ஏன் வெளியில் வந்தார்?

நான் கேட்கிறேன்... கூட்டணிக்குத் தலைமை அ.தி.மு.க.-தான் என்று சொல்கிறார்கள். ஆனால், அனைத்து கட்சிகளும் ஏன் பா.ஜ.க.விடம் சென்று பேச்சுவார்த்தை நடத்தினார்கள்? இது எப்படி இருக்கிறது தெரியுமா? “மாப்பிள்ளை அவர்தான், ஆனால், அவர் போட்டிருக்கும் சட்டை என்னுடையது” என்று நம்முடைய சூப்பர் ஸ்டார் நடித்த படையப்பா படத்தில் வரும் காமெடி போன்று இருக்கிறது.

நான் தெரியாமல்தான் கேட்கிறேன், கூட்டணிக்கு அ.தி.மு.க.தான் தலைமை என்றால், அதில் இருக்கும் சிறிய கட்சிகள் எல்லாம் ஏன் அ.தி.மு.க. சின்னத்தில் போட்டியிடாமல், பா.ஜ.க.வின் சின்னத்தில் போட்டியிடுகிறார்கள்? பழனிசாமியை முதலமைச்சர் ஆக்குவோம் என்று பிரதமர் மோடி அவர்கள் இதுவரை சொல்லி இருக்கிறாரா? அ.தி.மு.க. என்ற பெயரைக் கூட அவர் சொன்னது போன்று எனக்குத் தெரியவில்லை. NDA சர்க்கார், NDA சர்க்கார் என்றுதான் மீண்டும் மீண்டும் சொல்கிறார்.

**அறிவுக் கொழுந்து போல் பேசுகிறார் எடப்பாடி!**

ஆனால், நாம் “தமிழ்நாடு வெர்சஸ் NDA, தமிழ்நாடு வெர்சஸ் டெல்லி” என்று சொன்னால் மட்டும், “இது என்ன டெல்லி தேர்தலா?” ஏன் அப்படி சொல்கிறீர்கள்?” என்று பெரிய அறிவுக்கொழுந்து மாதிரி கேட்கிறார் பழனிசாமி! தன் மீதான ஊழல் புகார்கள், உறவினர்கள் வீடுகளில் நடந்த ரெய்டுகளில் இருந்து தப்பிக்க மொத்தக் கட்சியையும் பா.ஜ.க.விடம் பழனிசாமி அடகு வைத்துவிட்டார்.

மக்கள் வாக்களிக்காமலேயே M.L.A.க்களை ஏலத்தில் எடுத்து ஒரு முறை முதலமைச்சர் ஆகிவிட்டார். கூவத்தூர் வரலாறு எல்லாம் உங்களுக்கு தெரியும். மீண்டும் இவரிடம் ஆட்சி சென்றால் ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டையும் டெல்லியிடம் அடகு வைத்துவிடுவார். அடகு என்ன, மொத்தமாக விற்றுவிடுவார். இவரின் ஓனரான பா.ஜ.க.வின் ஒரே நோக்கம் தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுப்பதுதான். நேராக வந்தால் தமிழ்நாட்டு மக்கள் நோட்டாவிற்கு கீழே அனுப்பி விடுவார்கள்! அதனால்தான் கொத்தடிமைக் கூட்டமாக இருக்கும் அ.தி.மு.க. முகமூடியுடன் வருகிறார்கள்.

கடந்த 11 ஆண்டு காலத்தில் பா.ஜ.க. தமிழ்நாட்டிற்கான எதையும் செய்யவில்லை. நம்முடைய மக்களின் எந்தக் கோரிக்கையையும் நிறைவேற்றவில்லை. 12 ஆண்டுகளாக ஆட்சி செய்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டிற்காக இதுவரை ஒரு சிறப்புத் திட்டம் கூட இல்லை. அறிவித்த மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையும் இப்போது என்ன நிலையில் இருக்கிறது என்று உங்களுக்கு தெரியும். இப்போது வரை கட்டி முடிக்கப்படவில்லை.

**நியாயமான நிதியையும் விடுவிக்கவில்லை!**

நமக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய நிதியைக் கூட விடுவிக்க மறுக்கிறார்கள்.

மதுரை, கோவை, திருச்சி மாநகரங்களின் எதிர்கால வளர்ச்சிக்காக மெட்ரோ இரயில் திட்டத்தைக் கேட்டோம். அதுவும் முடியாது என்று சொல்லிவிட்டார்கள். சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதியை ஒழுங்காகத் தராமல் இழுத்தடிக்கிறார்கள். ஓசூர் விமான நிலையத்திற்கும் அனுமதி தரவில்லை. பள்ளிக் குழந்தைகளுக்கான கல்வி நிதியையும் தருவதைத் தடுக்கிறார்கள். குடிநீர் திட்ட நிதியும் இல்லை.

இவ்வளவு அநீதிகளையும் செய்துவிட்டு, தேர்தல் வந்துவிட்டது என்று, தமிழ்நாட்டிற்குக் கிளம்பி வருகிறார், பிரதமர் மோடி அவர்கள். கடந்த மாதம்கூட இதே திருச்சிக்கு பிரதமர் மோடி அவர்கள் வந்தார். நான் கேட்கிறேன்... அப்படி வந்தவர், “இதெல்லாம் ஒன்றிய பா.ஜ.க. அரசின் மூலமான தமிழ்நாட்டிற்கு செய்த திட்டங்கள் என்று சொன்னாரா? எங்களால் தமிழ்நாட்டிற்கு இதெல்லாம் கிடைத்திருக்கிறது” என்று பட்டியல் போட்டுச் சொன்னாரா? இருந்தால்தானே சொல்ல முடியும்! சட்டியில் இருந்தால்தானே, அகப்பையில் வரும்!

இதில், தி.மு.க. எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை என்று பொத்தாம் பொதுவாகச் சொல்லிவிட்டுச் செல்கிறார். என்னுடைய ஒவ்வொரு பேச்சிலும், ஒவ்வொரு சாதனைத் திட்டம் குறித்தும், புள்ளிவிவரங்களோடு விளக்கிச் சொல்கிறேன். நம்முடைய அரசின் திட்டங்களால் பயனடையும் பலரும் ஊடகங்களில் அதை தொடர்ந்து பதிவு செய்கிறார்கள். இன்னும் சொல்ல வேண்டும் என்றால், மக்களான உங்களிடம் கேட்டிருந்தாலே, திராவிட மாடல் திட்டங்களை வரிசையாக சொல்லியிருப்பீர்கள். பரவாயில்லை, எப்போதும் டூர் மோடுலேயே இருக்கும் பிரதமருக்கு இதையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்ள நேரம் இருந்திருக்காது; அப்படி இல்லை என்றால், தமிழ்நாட்டைப் பற்றி புரிந்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருந்திருக்காது.

அவரிடம் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், பிரதமர் மோடி அவர்களே... தமிழ்நாட்டிற்கு வாருங்கள்... ஒருவார காலம் இங்கேயே தங்கியிருந்து, எங்கள் தமிழ்நாடு எப்படி தலைசிறந்த தமிழ்நாடாக இருக்கிறது என்று தெரிந்து கொள்ளுங்கள். இந்தியாவிலேயே அதிகளவில் பெண்கள் வேலைக்குச் செல்லும் மாநிலம், நம்முடைய தமிழ்நாடுதான்! பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் நடப்பது மாதிரியான அட்டூழியங்கள் இங்கு கிடையாது! பெண்களைப் பாதுகாப்பாக வாழ வைப்போம் என்று பிரதமர் சொல்ல வேண்டியது, தமிழ்நாட்டில் இல்லை; பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் சென்றுதான் இதையெல்லாம் பேச வேண்டும்! அதைவிட்டுவிட்டு, NDA கூட்டணியினர் தமிழ்நாட்டைப் பற்றி அவதூறாகப் பேசுவது, தமிழ்நாட்டை நாசப்படுத்தவும்; தமிழ்நாட்டு வளர்ச்சியை கெடுக்க வேண்டும் என்றுதான்!

**7வது முறையும் நமது ஆட்சி தொடர வேண்டும்!**

தமிழ்நாட்டின் முன்னேற்றமும் வளர்ச்சியும் தொடர வேண்டும் என்றால், ஏழாவது முறையும் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைய வேண்டும், திராவிட மாடல் தொடர வேண்டும். பா.ஜ.க.வும் அதன் கொத்தடிமைக் கூட்டமும் ஆட்சிக்கு வந்தால் அதன் தீமைகள் நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு இருக்கும்! தமிழ்நாடு தமிழ்நாடாகதான் இருக்க வேண்டும்!

உத்தரபிரதேசம் போன்று, மணிப்பூர் போன்று வன்முறைக் காடாக ஆகக் கூடாது! இவர்கள் வந்தால் தமிழ்நாட்டின் பெயரையே தட்சிண பிரதேஷ் என்று மாற்றவும் தயங்க மாட்டார்கள்! இதைத் தடுக்க வேண்டும் என்றால் ஒட்டுமொத்த தமிழ்நாடும் பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணிக்கு எதிராக, ஓரணியில் இணைய வேண்டும்! நம்முடைய எதிரிகளையும் பா.ஜ.க.வின் உதிரிகளையும் வீழ்த்த வேண்டும்!

நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். நாம் போராடுவது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றிக்காக மட்டுமல்ல; நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றிக்காக மட்டுமல்ல, தமிழ்நாட்டின் வெற்றிக்காக! பா.ஜ.க.வின் டப்பா எஞ்சின் முன்னால், நம்முடைய திராவிட மாடலின் சூப்பர் ஃபாஸ்ட் எஞ்சின் ஒருபோதும் தலைகுனியாது! நம்முடைய ஸ்பீடு என்ன என்று காண்பித்துவிடலாமா? வெல்லப்போவது தமிழ்நாடு அணியா? டெல்லி அணியா? ஒரு கை பார்த்துவிடலாமா?

நடக்க இருக்கும் இந்த ஜனநாயகப் போரில், அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு, நம்முடைய தாய்த் தமிழ்நாட்டைக் காக்க, அனைவரும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை ஆதரிக்க வேண்டும்! கலைஞரின் மகனாக உங்களிடம் கேட்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்கு உங்கள் பொன்னான வாக்குகளைத் தாருங்கள். இது என்னுடைய கோரிக்கை மட்டுமல்ல; தமிழ்நாட்டின் நலனில் அக்கறை கொண்ட ஒவ்வொருவரின் கடமை! அதை உணர்ந்து, திருச்சி மேற்கு சட்டமன்றத் தொகுதியில் நம்முடைய வெல்லும் வேட்பாளர் திருச்சியின் தீரர் கே.என். நேரு அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள்!

திருச்சி கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் நம்முடைய வெல்லும் வேட்பாளர் இனிகோ இருதயராஜ் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள்!

திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள்!

லால்குடி சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் பாரிவள்ளலுக்கு உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும்!

மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் கதிரவனுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்!


திருவரங்கம் சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் துரைராஜுக்கு உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்களிக்க வேண்டும்!

மணப்பாறை சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் மனித நேய மக்கள் கட்சியைச் சேர்ந்த சகோதரர் அப்துல் சமதுக்கு உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்களிக்க வேண்டும்!

முசிறி சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் கருணை ராஜாவுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்!

துறையூர் சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நம்முடைய ராகுல் காந்தி அறிவிக்கும் வேட்பாளருக்கு கை சின்னத்தில் மிகப்பெரிய வெற்றியைத் தேடித் தர வேண்டும் என்று கேட்டு, உங்கள் பொன்னான வாக்குகளை உதயசூரியனுக்கு வழங்குங்கள்... வழங்குங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.





தமிழ்நாட்டு சட்டமன்ற தேர்தல் – 2026 முன்னிட்டு கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர், மேற்கு மண்டலப் பொறுப்பாளர், வி.செந்தில் பாலாஜி இராமநாதபுரம் பகுதி, புளியகுளத்தில் இருந்து பிரச்சாரத்தை தொடங்கினார். இதில் முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிசாமி, மாநகர் மாவட்ட கழக செயலாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் உள்பட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாநில, மாவட்ட, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.



கரூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் ஆர்.சி. எம்.தியாகராஜன் கரூர் வடக்கு ஒன்றியம் கடம்பங்குறிச்சி பகுதி மக்களிடம் உதயசூரியனுக்கு வாக்கு சேகரித்தார். நூற்றுக்கணக்கில் பொது மக்கள் திரண்டு வந்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.